**செ.வெ.எண்.13** **நாள்.08.01.2019.**

**திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள உழைக்கும் மகளிருக்கு வழங்கப்படும் அம்மா இரு சக்கர வாகனம் பெறுவதற்கான விண்ணப்பங்கள் உழைக்கும் மகளிர்களிடம் இருந்து வரவேற்கப்படுகின்றன.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

**-------**

2018-2019-ம் ஆண்டு முதல் ஒரு இலட்சம் உழைக்கும் மகளிருக்கு அம்மா இரு சக்கர வாகன திட்டத்தின் கீழ் பணியிடங்கள் மற்றும் பிற இடங்களுக்கு எளிதில் செல்ல இரு சக்கர வாகனங்கள் (Moped / Scooter) வாங்க 50 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ. 25000/- மானியம் வழங்க அரசாணை வெளியிடப்பட்டது. அதன்படி அம்மா இரு சக்கர வாகனம் 50 சதவீதம் மானியத்தில் பெற விண்ணப்பங்களை கீழ்க்காணும் அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம். மேலும் ஊனத்தின் தன்மை 25% சதவிகிதத்திற்கு அதிகமாக உள்ள பயனாளிகளுக்கு மானியத்தொகை அதிகபட்சமாக ரூ. 31250/- வழங்கப்படும், ஊனத்தின் தன்மை 25% சதவிகிதத்திற்கு குறைவாக உள்ள பயனாளிகளுக்கு அதிகபட்சமாக ரூ. 25000/- மானியத் தொகை வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1. | விண்ணப்பங்கள் பெறப்பட வேண்டிய அலுவலகங்கள் | மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மகளிர் திட்ட அலுவலகம் / வட்டார வளர்ச்சி அலுவலகம் (கி.ஊ) / செயல் அலுவலர் அலுவலகம் (பேரூராட்சி) / ஆணையாளர் அலுவலகம் (நகராட்சி மற்றும் மாநகராட்சி) |
| 2. | விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ள வேண்டிய நாள் | 08.01.2019 முற்பகல் 10.00 மணி முதல் |
| 3. | விண்ணப்பங்களை பூர்த்தி செய்து அனுப்ப வேண்டிய நாள் மற்றும் நேரம் | 18.01.2018 பிற்பகல் 5.00 மணி வரை |
| 4. | விண்ணப்பங்களை பூர்த்தி செய்து அனுப்ப வேண்டிய முகவரி | வட்டார வளர்ச்சி அலுவலகம் (கி.ஊ)/ செயல் அலுவலர் அலுவலகம் (பேரூராட்சி)/ ஆணையாளர் அலுவலகம் (நகராட்சி மற்றும் மாநகராட்சி) |

மேலும் நிபந்தனைகள் மற்றும் விண்ணப்ப படிவம் அலுவலக வேலை நாட்களில் காலை 10.00 முதல் மாலை 5.00 மணி வரை பெற்றுக் கொள்ள தெரிவிக்கப்படுகிறது.

**நிபந்தனைகள்:**

1. விண்ணப்பத்தாரர் விண்ணப்படிவத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் :

    i. வயது வரம்பு சான்று (18 முதல் 40 வரை)
    ii. இருப்பிடச் சான்று (வாக்காளர் அடையாள அட்டை, ஓட்டுநர் உரிமம், ஆதார் அடையாள அட்டை, மின்நுகர்வோர் அடையாள அட்டை, எரிவாயு இணைப்பு அட்டை)
    iii. சம்பந்தப்பட்ட அலுவலர்களிடமிருந்து வழங்கப்பட்ட ஓட்டுநர் உரிமம் அடையாள அட்டை

iv. வருமானச்சான்று

v. பணிபுரிகின்றமைக்கான சான்று (சம்பந்தப்பட்ட நிறுவனம் /தொண்டு நிறுவனம்/சமூக அமைப்புகள் மூலம் வழங்கப்பட வேண்டும்)

vi. ஆதார் அடையாள அட்டை

vii. கல்விச்சான்று (மாற்றுச்சான்றிதழ் / 8-ம் வகுப்பு முடித்தமைக்கான மதிப்பெண் சான்றிதழ்)

viii. பாஸ்போர்ட் புகைப்படம்

ix. முன்னுரிமைச்சான்று (தொலைதூர இடங்களில் வேலைபார்க்கும் மகளிர், மலைவாழ் மக்கள், ஏழை மகளிரை குடும்பத்தலைவியாகக் கொண்ட மகளிர், ஆதரவற்ற விதவை, மாற்றுத்திறனாளி, முதிர்கன்னிகள் (35 வயதிற்கு மேல்), ஆதிதிராவிடர்/மலைவாழ் மக்கள் மற்றும் திருநங்கைகள்)

x. சாதிச்சான்றிதழ் (SC/ST பிரிவினர்)

xi. சம்பந்தப்பட்ட அலுவலரிடமிருந்து பெறப்பட்ட மாற்றுத்திறனாளி சான்றிதழ்

xii. விலைப்புள்ளி பட்டியல்

குறிப்பு : ஓட்டுநர் உரிமம் மற்றும் வயது வரம்புச்சான்றை விண்ணப்பத்துடன் கட்டாயமாக இணைத்தல் வேண்டும்

2. வருடாந்திர வருமானம் ரூ.2,50,000/-ற்கு மிகாமல் இருத்தல் வேண்டும். குடும்பத்தில் தகுதியான ஒரு பயனாளியே பயன்பெற முடியும். மேலும் அப்பயனாளி அரசு வழங்கும் மானியத் தொகை போக மீதத் தொகையை செலுத்த தகுதியுடையவராக இருத்தல் அவசியம்.

3. இட ஒதுக்கீடு விவரங்கள்

| | | |
|---|---|---|
| 1. | ஆதிதிராவிடர் | 21% |
| 2. | பழங்குடியினர் | 1% |
| 3. | மாற்றுத்திறனாளி | 4% (ஊனமுன்றோர் விகிதம்) |

4. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலகங்கள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளை சார்ந்த அலுவலகத்திற்கு விரைவு தபால் மற்றும் பதிவுத் தபால் மூலம் வாரத்தின் அனைத்து வேலை நாட்களிலும் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 வரை அனுப்பலாம்.

5. அரசு வழிகாட்டு நெறிமுறையில் திருநெல்வேலி மாவட்டத்தின் மொத்த பெண்கள் விகிதத்தில் 1556321 (நகர்புற பகுதி - 768045, ஊரக பகுதி - 788276)-ல் 4455 வாகனங்கள் (நகர்புற பகுதி - 2198, ஊரக பகுதி - 2257) **வழங்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

**வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.**